ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நிதியியல் உளவறிதல் பிரிவு
திகதி 2024 நவெம்பர் 26

## 2024 மே தொடக்கம் ஒத்தோபர் வரை அறிக்கையிடும் நிறுவனங்கள் மீது நிதியியல் உளவறிதல் பிரிவு மூலம் விதிக்கப்பட்ட நிருவாக ரீதியான தண்டப்பணங்கள்

2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 19(2)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19(1)ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பயனைக்கொண்டு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாத நிறுவனங்களின் மீது நிதியியல் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன. நிதியியல் நிறுவனங்களின் தொடர்புடைய இணங்காமையின் தன்மை மற்றும் பாரதூரம் என்பனவற்றை பரிசீலனையிற் கொண்டு தண்டப்பணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

அதற்கமைய, பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தலுக்கான இலங்கையின் ஒழுங்குமுறைப்படுத்துனர் என்ற ரீதியில், நிதியியல் உளவறிதல் பிரிவு, நிறுவனங்கள் மீதான இணங்குவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு 2024 மே தொடக்கம் 2024 ஒத்தோபர் வரையான காலப்பகுதியில் இரண்டு மில்லியன் எழுநூற்று ஐம்பதாயிரம் கொண்ட தொகையை (ரூ. 2,750,000.00) கீழே காட்டப்பட்டவாறு, மொத்தமாக ரூ.2.75 மில்லியன் கொண்ட தொகையினைத் தண்டப்பணமாக சேகரித்தது. தண்டப்பணங்களாக சேகரிக்கப்பட்ட நிதி திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட்டன.

1. **எம்சிபி பாங்க் லிமிடெட்**

| | |
|---|---|
| **விதிப்புத் திகதி:** | 2024 யூலை 26 |
| **தொகை:** | ரூபா 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்) |
| **கொடுப்பனவுத் திகதி:** | 2024 ஓகத்து 08 |

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு வங்கி தவறியமைக்காக பின்வருமாறு நிருவாகரீதியாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

i. நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 6(ஆ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட 2008இன் 01ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் ஒழுங்குவிதிகள் மூலம் வேண்டப்பட்டவாறு, அத்தகைய பரிமாற்றல் ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான தொகையை விஞ்சுகின்றவிடத்து, வர்த்தக

நிதியுடன் தொடர்புடைய சில இலத்திரனியல் நிதிப் பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு வங்கி அறிக்கையிட தவறியிருந்தது.

2. **பாங்க் ஒவ் சைனா லிமிடெட்**

**விதிப்புத் திகதி:** 2024 செத்தெம்பர் 10

**தொகை:** ரூ. 1,000,000.00 (ரூபா ஒரு மில்லியன்)

**கொடுப்பனவுத் திகதி:** 2024 செத்தெம்பர் 20

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம் அத்துடன் அதன் கீழ் வழங்கப்பபட்ட விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றை கடைப்பிடிப்பதற்கு வங்கி தவறியமைக்காக பின்வருமாறு நிருவாகரீதியாக தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

i. நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 6(ஆ) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட 2008இன் 01ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் ஒழுங்குவிதிகள் மூலம் வேண்டப்பட்டவாறு, அத்தகைய பரிமாற்றல் ரூபா ஒரு மில்லியனை (ரூ.1,000,000.00) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமனான தொகையை விஞ்சுகின்றவிடத்து, சில இலத்திரனியல் நிதிய பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை வங்கி அறிக்கையிட தவறியிருந்தது.

3. **வோக் ஜுவெல்ர்ஸ் பிரைவெட் லிமிடெட்**

**விதிப்புத் திகதி:** 2024 ஒத்தோபர் 02

**தொகை:** ரூ. 750,000.00 (ரூபா எழுநூற்று ஐம்பதாயிரம் ரூபா)

**கொடுப்பனவுத் திகதி:** 2024 ஒத்தோபர் 10

**தண்டப்பணம் விதிக்கப்பட்டமைக்கான காரணம்:**

நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தைக் கடைப்பிடிப்பதற்கு கம்பனி தவறியமைக்காக நிருவாகரீதியான தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டிருந்தது.

i. நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவு, 2018இன் 01ஆம் இலக்க பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவனம்) விதிகளின் 9(2)(ஆ), 10(அ) மற்றும் 11ஆம் விதிகள் மூலம் வேண்டப்பட்டவாறு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 15,000 அல்லது அதற்கு மேல் இலங்கை ரூபாவில் அல்லது அதற்குச் சமனாக ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நடாத்தப்படுகின்ற காசுக் கொடுக்கல்வாங்கல்களை நடாத்துகின்ற

வாடிக்கையாளர்களின் அடையாள ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது.

ii. மேலும், நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்தின் 4(1) ஆ பிரிவு மற்றும் விதிகளின் 38(1) ஆம் விதி மூலம் வேண்டப்பட்டவாறு வாடிக்கையாளரின் அடையாள ஆவணங்கள் பற்றிய பதிவுகளைப் பேணுவதற்கும் வைத்திருப்பதற்கும் கம்பனி தவறியிருந்தது.